12132
14 MAY 1930

ஓம்
தத் சத்
பரா பர நமஸ்து.



சிங்கார வடிவேல்

சிக்கல்

ஸ்ரீ பரமானந்த சாமி திருவாய் மலர்ந்தருளிய

# ஷண்முகப் பாமாலை

## பக்தரவலக் கீர்த்தனை.

முதற்பாகம்.

கா. மா. வேதாசல முதலியார்.
ஆ. இராஜகோபால் முதலியார்.

பார்வையிடப்பட்டு

உமாபதி பிரஸில் பிரசுரிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்] 1930 [காபிரைட்

விலை அணா 0—2—0

PRINTED AT
UMAPATHI PRESS,
20, Krishnappa Naick Tank Street, G. T., MADRAS.

உ

முருகன் துணை.

## வெண்பா.

கற்பக பிள்ளையார்
காப்பு அற்புதமாக விரும்பு.

**கற்பகமே சொற்பதமே சீரொத்து**
**நற்பதந் தந்தாளுதற்கு—நாவினுறை**
**சிற்சபையின் குண்டலியே**
**தற்பரனே தானருளும் காப்பு.**

அம்பிகா—விருத்தம்,

தாயே சுதந்தரி கௌரி நாரணி
தந்தருளுஞ் ஞானமணியே
சேயனைக் கண்பாரு சிந்தையிலடிப்பணி
சிறுவனுக்கருளு மணியே
காக்ஷியின் கமல மலர் இக்ஷித்தடிபணி
கடாக்ஷித்தருளு மணியே
மாக்ஷீயே சத்தியாய தாக்ஷியே கண்மணி
மைந்தனுக்கருளு மணியே
ஆதரி சடாதரி அம்பிகா நன்மணி
தாதரிநிராதார மணியே
நிரந்தரி துரந்தரி அம்பிகா மனோன்மணி
நித்திய கல்யாணி ரூபி
பணியன்மிக தழுவினேன் சங்கரி சிவகாமி
பாலனுக்கருளு மணியே
சித்தனி பக்தனுக்கருளு சுயஞ்சோதி நீ
சித்தவைத்தாளுதற்கே.

## தும்பிக்கையன் துதி.

தும்பிமுகமுதல் வா போற்றி
நம்புமடியர்க்காளா போற்றி
முக்கண்ணன் முதல்வா போற்றி
இக்கணமென் நாவில் வா போற்றி
தந்திகணநா தா போற்றி
முந்தி முக்கணி வா போற்றி
மூஷிக முதுகா போற்றி
முத்திதந்தாளா போற்றி போற்றி.

(நாதா கருணை புரிவாய் என்ற மெட்டு.)

இராகம்—ஆனந்த பைரவி தாளம்—ஆதி.

பல்லவி

(1.) சம்போ கணநாதனே—அருள்செய்
லம்போ அரஹரனே ஓம் ஜெய.

அனுபல்லவி

(2.) ஐங்கர முகதொளிர் சங்கர மகனே
ஓங்கார மண்டபத்தில் ரீங்காரங்கொண்ட சிவ

சரணம்

(3.) தேவா மூஷிகமீது வா
வா சேயனைக் கண்பார் பா
வா நாவிலருளுந் தா
வா ஜெயகுண தவ சிவ. (சம்)

(4.) அந்தா பரப்பிரமான ந்
தா புகழுவேதா ந்
தா ஜெகநித்தியான ந்
தா திருவருள் ஓம் ஜெய (சம்.)

222983

(ஓம் சங்கரி என்றமெ[illegible])

இராகம்—புன்னாகவராளி, தாளம்—ரூபகம்

பல்லவி

(1.) ஓமம்பிகா ஓம் அம்பிகா

அனுபல்லவி.

(2.) உனதிருபதமலர் சதமருள் சரஸ்வதி மதியென
வதனி

சரணம்.

(3.) நித்திய குண சங்கரர் வாணி
சத்திய தவசுந்தரி வேணி
பக்திக்குருபராமுக நீலி
முத்திக்கருள் தருமதனி (ஓம்)

(4.) மா மம்பிகா ஓமம்பிகா
பதிமநிமணி சுடரொளி அதிநிதி சரஸ்வதிமதனி
தாயேயுன் பொன்னடி தந்தாள்
சேயனைக்கண் பார்க்கவந்தாள்
தகதக நடமிடு சிலம்பொலி
நகநக மறகத சிதரொளி (ஓம்)

(கோலாகால நீலமென்ற மெட்டு.)

இராகம்—பைரவி. தாளம்—ரூபகம்

பல்லவி.

(1.) கருணையவதார முகா
சிவஷண் முகா

அனுபல்லவி

(2.) கடைக்கண்பாரும் காருங்கெங்காதரமுகா

121328

சரணம்

(3.) கங்காதரமா ம கனே
கெங்கை சிவ சங் கரனே
உன்னிருபதமலரனுதின
எண்ணி துதித்திடும்பாலனை
கருணை கண்பாரய்யா வடிவேலய்யா
தருணமிதுவே தமயனைக் காரய்யா கருணை

சுந்திரா நடமிடு தில்லையா
மந்திரா குருதவ எல்லையா
எந்திராபவநிலை முல்லையா
சந்திராமணி சுடர் சொல்லையா

(4.) கோபமேனோ குழந்தை மீது
தாபமேனோய்யா மாமுருகையா
ஞானகுரு மௌன கார்திகேயா
பாந்தம் பகர் மொழி
பரமானந்தம் செவிதனி லுரை
வானந்தம் குருதவ நிலை
யானந்தம் மருள் சிவ திருவடி கருணை

இராகம்—பந்துவராளி தாளம்—ரூபகம்

பல்லவி

(1.) ஏழைமீது என்ன வர்மமா

அனுபல்லவி

(2.-ஏனய்யா சொல்லு ஏழைபொருக்கயாநன்றோ

சரணம்

(3.) வாழையடி வாழை யன்றோ
ஏழை முக பார்க்காதொன்றோ

உன்னையன்றி யுலகுமீது
உறுதி மொழி யுரைப்பாரன்றோ
கந்தா கெதி வேறுமில்லை யந்தா
ஆதரி அடியேனை வந்தா
ளனுதின மருள்திருபரமானந்தயடியேன். ஏழை

இராகம்—புன்னாக வராளி. தாளம்—ஏகம்

பல்லவி

(1.) தந்தானத்தன தனவென்றாடு மயிலே பறந்தாடு மயிலே
விளையாடு மயிலே குயிலே.

அனுபல்லவி

(2.) கோட்டத்திலே நடமாட்டத்திலே
செந்தோட்டத்திலே
காவனத்தில் நின்று கதறிடு
தாவனத்தில வள்ளிக் கேற்க நீ (ஆடு)

சரணம்

(3.) நாரதமாமுனியவர் கூவியகாதர வேலுடநின்றாடு
சோபித சந்தான புகற்றிட
பாவலருணை பற்றுட புகன்றிட
பற்றற்றோ பழமுதிர் சோலை
கற்றன்றோ நினைமாவை புசித் (ஆடு)

(4.) தந்தரனத்தன தன தனனன
செந்தூர் கோட்டத்திருமயில (மாடு)
புராண திருகந்தப்பா மதுரை
சம்மந்தப்பா வரமருள் மனமறந் (தாடு)
சற்றானந்தம் பதவுரை

பொற்முனந்தம் புகமுரை
கற்றோனந்தங் கதிர்வடிவேல் (நின்றுடு)
பார்வதி பொற்றுடா
பரமனருளா டா
பரஞ்சுடர் வேலே
கரந்தனிலேந்துஞ்
சாமிசெஞ்சரவணத்தில்
வீரதீர சூர சம்ஹார செய்து நின்றுடு (மயிலே)

(5.) ஸ்ரீலஸ்ரீல குருபரமானந்தா புகழ்
ஸ்ரீலஸ்ரீங்காரமணிதொனிமலரே
பராமுகபாராதிரு முருகா
சரஹண சிகிதனிலே விளை (ஆடு)

தாதாபாய் என்றமெட்டு
இராகம் தேசிகதோடி தாளம் ஆதி

பல்லவி

(1.) காக்ஷியே கந்தா உன் காக்ஷியே

அனுபல்லவி

(2.) கண்டே ாரின்புடன் கொண்டானந்தங் கண் (காக்ஷி)

சரணம்

(3.) வெள்ளிமலே மீதுதிக்கும்
வேலாயுத சிங்காரா
புள்ளிமயிலேறு பூரணசம்பந்தா
வள்ளி தெய்வானேயின்
வள்ளல் மாணுளாக்கண். (காக்ஷி)

தொகையறு

ரெத்தினமணி யோசையொளிர்
பத்மாசனத்தில் தவ பதுமதொனிதேவ முருகா

சித்திரஜெகமதி சுடரின்
சிதாகாசவள்ளனுனேவேண்டுவர்க்கருளுமுருகா

(4.) பழனிமலை வீற்றிருக்கும் பக்தர்களுக்கருள் சுரக்கும்
பாலன்மாணுக்கன் படுந்துயர்தானன்ருே
பாலன்முகபார்க்காமலே போவதுண்டோ கண் (காக்ஷி)

இராகம் முகாரி (ஓரடிபதம் சந்தம்.) தாளம் ஆதி

பல்லவி

(1.) ஆதிபராபரஞ் சுடரே
ஆறுமுக ரே

அனுபல்லவி

(2.) அந்தனர் வேதியர் அடிதொழு முகனே
சந்ததம் போற்றினே னருள்முக சிவனே
வந்தருள் குரு நவமணிசுடர் பவனே
மகிபதிதனில் விளையாடிடு பரனே

சரணம்

(3) நீதி விளங்கும் குக கந்தா என்மனதினில்
ஓதியருளுஞ் செஞ்சம்பந்தா
பால்மொழி காருண்ய சரவண கந்தா
சேய்மொழி தமதெனப் பிரணவனுந்தா
திருவடி தொழுதருளனுதின் வந்தாள்

(4.) ஏழை சொற்றம்பலமேறு தோ
என்மீதில் வா தோ
வேழை சகிப்பேனே இப்போதோ
காரண கலியுக வரத சிங்காரா
கடியேன் பிழை பதபார்த்தருள் குமாரா

தாவென கரமடியானருள் வாரா
தவபுரி புகழ்ந்தருள் குருமணிவீரா ஆதி.
(மனமே யரிந்துணர்ந்து என்ற மெட்டு)

இராகம்—முகாரி தாளம்—ரூபகம்

பல்லவி

(1.) ஆறுமாமுக கந்தசாமி தேவா

அனுபல்லவி

அடியனை ஆட்கொள்ள நீ நேமி

சரணம்.

(2.) வள்ளிதெய்வானை மணவாளா சிரகு
புள்ளிமயிலேறி தந்தாளா
(3.) ஓங்கார சிவ சுப்ரமண்யா கந்தா
சிங்கார தய்யா மணிபுண்யா
(4.) ஏழைமுகங் கண்பாரும் வேலா சேயன்
வாழையடிமுகம்பார் சீலா

(திருப்புகழ் எங்கு முழங்கு மெட்டு)

இராகம்—மோகனம் தாளம்—ஆதி

பல்லவி

(1.) மதுரை சன்னிதானம் நோக்க நல்லானந்தம்

அனுபல்லவி

(2.) மாணிக்கம் ஆதிக்கும் போதிக்கும் மீனம்பாள் திரு (மதுரை)

சரணம்

(3.) முத்தமிழ் முழங்கும் முக்தர்களுந் தங்கும்
முகதவசிவ குருதொழனருள் தவகுணபகவத்குகதிரு

(4.) எங்கும் புகழோங்கும் சங்கம் பெரு நீதி
தங்குதவசுடர் மதிபளி பொங்குமறகத [illegible] ஒளி திரு (மது)

(5.) சோமசுந்திரரே சுடராறுமுகரே
வேடன்குல குறவள்ளி நாயகரே
குமரா குருபரசமர்புரி
பரமாமது சுதனருள் திரு (மதுரை சன்ன)

இராகம் தன்னியாசி தாளம்ஆதி சிதம்பர தரிசனம் [illegible] மெட்டு)

பல்லவி

(1.) ஒளிர்வடி ஞான ஷண்முகவேலோனே
ஓராறு முகவடி வேலாயுதனே

அனுபல்லவி

(2.) வளர்பிறை நின்றொளி ஜகதருப்னே
வள்ளி தெய்வானை மணவாள மானே (ஞா)

சரணம்

(3.) ஜெயஜெயமென்றுனை நினைந்துகொண்டாடும்
ஜெயமருள் பெற்றவர்க்கின்பந்தந்தாடும்
ஜெகபண்டி தாயுன்னை மைந்தன் கொண்டாடும்
சேயன் பரமானந்தா சென்முன்றிலாடும் (ஞா)

(4.) கந்தபரிமள சந்தன வாசா
கருணைப்பிரசாதனை தந்தருள் நேசா
அந்தனர் அடிதொழும் வரப்பிர காசா
சந்ததம் போற்றினேனென்குரு நேசா (ஞா)

(5.) ஏழைமுகம் பாராறுமுக நாதா
ஏனோ எந்தனுடன் மல்லுண்ட வாதா
கேட்குங்குழந்தை முகம் பார்க்கவொண்ணாதா
கேனோ என் மீதினில் மனமிரங் காதா (ஞா)

இராகம்—ஆனந்தபைரவி (முத்துகுமாரா என்ற மெட்டு.)

பல்லவி [தாளம்—ஏகம்

(1.) வெற்றி வேலாவா

அனுபல்லவி

(2. (முத்துச்சரவண தனிலுயர்
பக்திக்குருபகராறு முகா வெற்றி

சரணம்

(3.) மண்யா மலரடி தொழுகண்யா குமராறுமுக வெற்றி
கோலகால நீலமயிமேலவாக மீதிலேகுக வெற்றி
சேயன் முகம்பாரு தேவாமொழிதாரும்
சதங்கை கலகல ஒளிர்
பதங்கை பலபல ராறுமுக வெற்றி
அய்யா மலரடி குருமுருகையா
மறகத மயிலேறு
தத்தும் வனத்தில் நின்று
நத்தும் வள்ளிக்கான வ வெற்றி

(4.) தண்டை சிலம்போனே
தாவாடம் பூண்டோனே
ததி இது சரகண பவநிதி
மதுசூத மருமகா மலர் பதி வெற்றி

இராகம்—சிந்து பைரவி (தாயே தந்தை என்ற மெட்டு

பல்லவி [தாளம்—ஆதி

(1.) கந்த மிகுந்த சிக்கல் நகர் வாழ் வடிவேலா
அனுகூலா தவபாலா

அனுபல்லவி

(2.) திரு முருகா அரிமருகா
மரகத மயில்மிசை நடமிடு கந்த

சரணம்

(3.) சந்தனங்கந்தபரியள ஞான ஷண்முகா
தவயோகா சிவபாகா
சரரத நெறிபட மரஹரசிவகுருமணிசுடர்
காக்ஷி கைலாக்ஷி கண்காக்ஷி
சத்தியாக்ஷி கலகலவென சிலம்பொலிநடமிடு (கந்த)

(4.) செஞ்சரவணத்நில் நின்றுவிளையாடு நாதா
சம்போதா பொற்பாதா
சமர்புரமெரி குருபரதிருநடமிடு
பகைசூரகொடி அடியொடுமுடி அருத்திடுகுக
சுகங்காரு அருள்தாரும்
கண்பாரு கனகனவென அனலது நடமிடு(கந்த)

(என்முகம் பார்த்தருள் என்ற மெட்டு.)

இராகம்—தன்னியாசி தாளம்—ஏகம்.

பல்லவி

)1.) ஏழை என் மீதினிலென்ன வர்மமய்யா
ஏந்திக் கரந்தொழு மேழைகண்காரய்யா

அனுபல்லவி

(2.) எந்தன் பவபிணி கவலை தீரய்யா ஆறுமுகவேலய்யா
அடியேன் பாலன் படுவதய்யா
குருமந்தர சுப்பிரமண்யா யுலகு
ஞான பண்டிதனய்யா

முடுகு

யாரு எந்தனுக்கு வேறு யாருகதி
காருமாமுருகையா

கார்த்திகா குமர ஜோதியான தவ
சாமவேதனய்யா மந்த்ர கிரி
மைனகுரு சுந்திரமிடு
சுடரொளிபவா

சரணம்

(3.) சாயுச்ய சாலோக ஞானகுருமணி
சாருசேயனைக் கண்பாரு நவமணி
காரு சிவஜஜயோக சுடர்மணி
ஞான சித்தாந்த மணி குரு
நடன சுந்திர மணி தொனி
ஞான சங்கீத மணி பதி
நித்தியானந்த மணி
கோலாகால மயில்மீதிலேறிவாரும்
குமரகந்தவேலா
கோபமேனோ குழந்தை மீதினிலே
தாபமாமோ வேலா
சர்க்குரு தவ நிலையதிபதி
சந்ததமருள் சுழி சுயஞ்சோதி ஏழை

இராகம்—பியாக் (வளர்பிறை என்றமெட்டு) தாளம்—[ஆதி

பல்லவி

(1.) சரகணபவகுக ஷண்முகநாதா
தருணந் தமயனைக் கண் பார்க்க வொன்ணுதா

அனுபல்லவி

(2.) சததள சிலம்பொலி நடமிடு நாதா
சலனம் விலகும்படி செய்ய வொன்ணுதா
வேலா மைந்தன்மீதுவா தா
வேண்டினேனருளுபாதா

சருணங் தருணங் கருணைபுரிவாய்
மரகதசிகிதனில் விளையாடு

சரணம்

(3.) நன்திசுழி இதழின் காருண்ய வாசா
நளின கமலவெண்சாரையின் நேசா
வலமிடு நடமிடுகந்தனி நேசா
வரமருள் வள்ளிதெய்வானை உல்லாசா
காரும் கந்தா என் முன் வாரும்
காக்ஷிதந்தாட் கொள்ள நீரும்
பிரணவமணி குரு நவமணி
பரமானந்தாணி பகர் மொழிமணி (சர)

(பன்னீருகை வேலனடி என்ற மெட்டு)

இராகம்—ஆனந்த பைரவி தாளம்—ஆதி

பல்லவி

(1.) சாமவேத சங்கீதனே
சாலோக சாயுக்ஷியனே

அனுபல்லவி

(2·) சிவகுருஜ ஷண்முகனே
சேவல் கொடி கொண்டவனே

சரணம்

(3.) மாருமுக வேலவனே
மானைமுக கிளையவனே
அடியேன் முன்வா வேலோனே
(4.) மன்பார்க்கருளானந்தனே
தங்கமயில் வாகனனே
சங்கீத மோ கனனே
ஓங்காரமண்டப னே
சிங்கார வேலவா

(5.) பண்ணீருகர முல்லாசா
பார்வதி யீன்ற நேசா
பரமகைலாச நேசா
பரஞ்சுடருன தேசா (சாமவேத)

(ஐயே மெத்தகடினம் என்ற மெட்டு

இராகம் புன்னுக வராளி தாளம்—ஆதி

பல்லவி

(1.) ஞான சங்கீத யோகனு திருச்சிக்கல்
தங்கமயில் வாகனு

இனுபல்லவி

(2.) நடன நாசி சுழியில் நின்ருடு யோகனு

சரணம்

(3.) மல்லிகார்ச்சுன புரகண் காக்ஷி கமழ்
மலர்மருசக்தியாய தாக்ஷி புகழ்
மகனுக்கருளுந் தந்தாண்டு கடாக்ஷி ஞான

(4.) கூவுங்கொடி சேவலா குரு
தேவர் படை காவலா
கொஞ்சிவிளையாடு ரஞ்சித வேலா
தெய்வானை வள்ளி சமேத ரூபா ஜெய
தெண்டாயுதங் கைகொண்ட பூபா உன்
திருவடியனுதினபனுவலோர்க்கருள்யோபா

நாதாயினியமலர் பாதா என்றமெட்டு

இராகம்— தேசிகதோடி] [தாளம்—ஆதி

பல்லவி

(1.) கந்தா சேயனுக்கருள் தந்தாள் இனியமலர்
சேர்வடியனுதின துதி செய்யுபடி யருள்வந்தாள்

அனுபல்லவி

(2.) பாதா நித்தியகுண சம்போதா சிற்சபைமீது
தகதகவொளிதிரு ஜெகதிருநடமிடு ஒளி கந்தா

சரணம்

(3.) நாதா எந்தனுடன் யேன்வாதாஏனய்யா வேலா
ஏழை படுந்துயர பார்த்திருக்கலாமோ மெய்யா (கந்)

(4.) சம்போ சக்கரியின்றலம்பே அரகரனே
சரரத நெறியருள் குமரா குருபரவேலா

(1,) வேலா குருபரகுணாளா வள்ளிசமேத
குழந்தைக்கருள வடிவேலாயுத சுகுணாளா (கந்)

கலயாண சுந்தரி என்ற மெட்டு

இராகம்—தேசிகதோடி] [தாளம்—ஆதி

பல்லவி

(1.) பழனியப்பா யுன் சன்னதி
பண்டாரவேலா
பக்ஷம் வைததருளுநீதி
தக்ஷணமே வேல் (பழனி)

சந்த அனுபல்லவி முடுகு

(2.) மச்சமது மீன்காவடிகளது கோடி
இச்சையுடன் பால்பூதி கொண்டுகமோடி
பச்சைமணிகலகலவென கொண்டாடு

பரமகைலாயவடி பரமானந்தக்காவடி
சுரந்து பொங்குங்கடலே கரந்தளியும் பொருளே ()

சரணம்

(3.) ஞானசண்முக வேலோனே
குருபரனே
சோதிமயாந்தவனே
சுடர்வேலோனே
தேவர்சபை நர்ரதமுனி வீணைவாசிக்க
பாவலர் கவியினை பதமுன்றி பூசிக்க
சேவலன் கொடிகொண்டவேலினை நேசிக்க
கருணைவடிவேல் வாங்கு சிரந்து சிகிலிலோங்கு
திருவருள் குருநாதா தருணங்கருணைபுரி (பழ)

இராகம்—புன்னகவராளி] [தாளம்—ரூபகம்

பல்லவி

(1.) கோலாகால குழந்தைமீ து
கோபமேனோ யோகா

அனுபல்லவி

(2.) கோரிவந்து யோலமிட்டே ன்
கோபாலன் மருகா

சரணம்.

(3.) கந்தா எந்தன் முன்னில் வந் து
காக்ஷி தந்தாள் யோகா
கருணைபதி மாணிக்க மே
தருணவந்தாள் பாகா
(4.) வேலாயுதாயுனையன்றி யே
வேறு று ஷண்முகா

வேண்டினேன்யான் வேலவ னே
வந்தருள் செய்யோகா கோ

இராகம்—சாவேரி] [தாளம்—ரூபகம்

பல்லவி

(1) யாரிடத்தில் முறையிடுவேன்
என்வினையை வேலவனே

அனுபல்லவி

(2.) பாழுடலை யேன் படைத்து
பாதவிக்கும்படி செய்தாய் யாரிட

சரணம்.

(3.) வேலாயுன்னையன்றி நாதா
வேறுமுண்டோ குரு நாதா
சீலாயுன் மனமிரங் காதா
கோலாகலருள் தந் தாதா யாரிட

(4.) கண்கமலகாக்ஷி கந்தா
புண்யா சுப்ரமணிய வந்தா
என்னுபாலனுக்கரு ளந்தா
கண்சுடராறுமு கந்தா யாரிட

திருப்புகழ் சந்தம்

1. மருவுமலர் சோலை கருணையவதார
குருமுனியாசிவ வடிவேலா
2. முரவு புரந்தாடு பரந்து விளையாடு
திருமுருகாகுக குருநாதா
3. திருமுருகா முன்றி பரிமலர்கள் சூட்டி
வருபவனி முன்பு பலகோடி

4. தனகமதவாணிகனக கமலோக
ஜெனகர் தொழும் குரு பெருமானே
5. தினகர்பல நாதகண அசுரர் மாள
மணபுரி போர் செய்யு கதிரேசா
6, தருணவருவாயே கருணைபுரியவே
சரவணனந்த முருகோனே.

ஓராறு முகமேனய்யா என்றமெட்டு

இராகம்—காம்போதி தாளம்—ரூபகம்.

பல்லவி

(1.) ஓடிவா கோலாகால னே
ஒப்பில்லாத சுப்பிரமண்யனே ஓடி

அனுபல்லவி

(1.) ஓங்கார நாதவடிவேலாயுத குமரா
ஓங்குபெற செல்வ நிதிபதி
ஆங்குமருள்வே தநிதிததி ஓடி

சரணம்

(3.) பவபிணி கடலை நீ போக்கி
பரமபதிக்கென்னை நீ யாளாக்கி
பகன்றருள் செய்யுங்காவனந்தனிலே
பறந்தாடுமயில் மீது ஞான
சுறந்தாடுகுறகொடி சேவலா
(4.) புள்ளிமான்வர புகன்ற நாரதர்
வள்ளிக்காகவனவேடரப்புதர்
தெள்ளியதேன் மாவை தானல்லிமுண்டவர்
வனவேடர் வேடம் பூண்டவர்
கனமான் வரகண்டு புரண்டழர் ஓடி

(5.) வேடர் விரட்டவும் மாவேங்கையான தும்
வேடர்கண்டு மருண்டு திகைத்த தும்
போராட வள்ளியின்மேற் காதல்கொள்ளவும்
ஓதுகிளிமொழிமாது இப்
போது தருசரவணபவா. ஒடி

ஞானசம்பந்தா என்றமெட்டு

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஆதி

பல்லவி

(1.) கருணையானந்தாகு கானந்தா நித்தியானந்தா
வரந்தா சாமிவே தாந்தா பரந்தா
ஞான சம்பந்தா ஞான

அனுபல்லவி

(2.) வந்தேனுந் தன்சன்னதி முன்வந்தாளுந்தா
திரு தற்பறத்தில் நின்று விளையாடுங் கந்தா
கைவெற்றி வடிவேலைவாங்குஞ் சுப்ரமண்யர
சூர பத்மாவை சம்மாரஞ்செய்யுந் தேகாருண்யா ஞா

சரணம்

3.) காவடியுன் சன்னதியில் கோடா கோடி
பழ பால்வடியுந் தேனிழனி தேடாமோடி
முன் சேர்வடியே கெதி என்று வந்தேனடி
தருகு மரவேல் சரமணிவேல்
அருமுகவடிவேல் குருநிதிகரவேல் ஞான

ஓர்திருநல்லூர் ஒய்யாரா என்றமெட்டு

இராகம்—காம்போதி தாளம்—ரூபகம்

பல்லவி

(1.) ஓர் திருமாநகர் மதுரைமானே திரு
கார்கதிர்மா செந்தூர் கடம்போனே குரு

தேவரடி பொடி இடும்போனே கந்தா
வரமருள் தர மறகதமயில்
நரமிசை நடமிடு குருதவ. (ஓர்)

(2.) திருபுரமெழி தனலிடும்படி செய்தாய் • வீரா
தீரா உபதேசமொழி தந்தாய் பவ
பூராமுகராறுமுக நிலை சேர்ந்தாய் கந்தா
நெறிபடமலைபொடிபடும்படி
எறிகிடமடியவர்மாண்டுள.

தேனுந்தினைமாவை யுண்டவனே திரு
தெண்டாயுத ஞான ஷண்முகனே குரு
பண்டாரபழனி முருகோனே வளர்
திருமுருகா வடிவழகா
சரவணதனிலுயர் வடிவா. (ஓர்)

வண்ணத்தினைமாவை என்ற மெட்டு

இராகம் தேசிகதோடி] [தாளம் ரூபகம்

பல்லவி

(1.) கழுகாசலமுக நாதா என்மேல் வாதா ஏழை
சொன்னுலுமக்குந்தெரி யாதா முகா
கந்த பரிமள பாதா குரு

அனுபல்லவி

கதிரேசனே குமரேசனே
மயில்வாகன வடிவேலோனே (கழு)

சரணம்

(2.) வள்ளி தெய்வானை மணாளா குணாளா மே
வுசிக்கல் சிங்கார வடி வேலா தினைவன
வாமனுவுதார சிலா கருணை

பரமேமணி குணமேலணி
சரமேலணி சுடர்வேலவா (கழு)

(3.) கந்தா கோதண்ட செந் தேனே முருகோனே பரமா
னந்தனுக்கருள் மானே குரு
சரகண ஷண்முகசி மானே அருள்
ஜெயமே கொடி மடியர்க்கருள்
புயமே கரவேல் வாங்கிடு (கழு

ஜோதி மீனாக்ஷிபாகா என்ற மெட்டு
இராகம்—முகாரி] [தாளம்—அதி

பல்லவி

(1.) தென்பழனி மௌனதேசிகா சிவராஜயோகா

அனுபல்லவி

(2.) என்முகம் பாரும் பண்ணீருகாவாரும்
திருப்பரங்குன்றந்தனில்வளர் சிவ

சரணம்

(3.) பருமணிசுடர் வேலைவாங்கினவா தருணங்
கடைக்கண் பாவா
குருமசிவயமங்கள பாதா
அருணகிரிக்கருளு வினோ தா

தொகையரு

இருளகன்றொளியான கருணைபுரி தேசிகா
மௌனகுரு ஞான யோகா
மாணிக்க மகுடமுடி மதுரைபதி சுந்தரா
ஜோதிமயமான குமரா

(4.) வந்தாடு பூசக்காவடி யே கோடாகோடியே
கொண்டாடுதேவருமன்றாடு தில்லையில்
நின்றாடு மாமயில் வெலாயுதகுக தென்

இராகம்—புன்னாகவராளி] [தாளம்—ஆதி

பல்லவி

1. முருகா என்மேல் தயவில்லையா
வருவாய் மாமயிலேறி கந்த

அனுபல்லவி

2. காருங்கணபதிகிளைமுக
சாருஞ்சரவணபவதிரு (முருகா)

சரணம்

3. பாதப்பணிபூசை செய்திடு சாதக்கருள்குரு-
பேதப்பிதற்றுதானந்த பாதத்திருவடியருள்தா
4. கங்காதரமாமக னே ஹரிமால்
திருமருமக னே
சேவித்தேன் குருபராமுகதிரு
பாவித்தேன் பழமுதிர் சோலை
பரமானந்தா வந்தாள்
அரகாசிவகுருபவ நிலையா (முருகா)

இராகம் தோடி] [தாளம் ரூபகம்

பல்லவி

(1.) மயிலோன் ரா ரா
மரகத மயில்மிசை நடமிடு (மயி)

சிதரத கலகல சிலம்பொளி
திருப்பரங்கிரு குருதவமொழி (மயி)
பூததா வனத்திலா டு
பித்தா மலரிணைசூ டு
சித்தா வனத்தில் நின் று
கத்தா மரைத்த பூம்மொ ழி (மயி)

121323

அனுபல்லவி

(2.) பாந்தாடு வாசிசிகிதனில் சுநந்தாடு முருகர்-
நிரந்தாடு பால்பழகாவடி சா [பழமுதர்கணி
சா செஞ்சரவணத்திலே ஜெகவா
சா குஞ்சரணத்திலே முருகே
சா குறமன மகிழ்படி செய்திடு
மணமகள் கரவேல் வாங்கிடு
சிரைமீள தவதுதி செய்திடு

முருகா முருகா முருகா
சிறுமகன் சொற்பத தந்தருள்
குமரா குமரா குமரா
கூவியழைத்திடு பாலனுக்
கருமருந் தருளிடு ஒளி (மயி)

சரணம்

(3.) ஏழைமுகம் பாருமய் யா
என் சுப்ரமண் யா தேவா
எங்கும் நின்றொளிவடி வேலா
தங்குந்தமர் தாம்பர வேலா
சங்குடமர் மரதாள முனிசதி
எங்கு பஜனைகச்சேரி ஸ்தலதுதி

சாது மடந்திருந்தந்த கோவே
ஓதுமோரெழுத்தாடு ஒளி (மயி)

(4.) சோமசாமிசே குமாரா
சாமகீத சர்ச்சமாரா
சமர்புரி திருப்புகழோதிடும்
அமர்படை சிரைமீள காத்திடும்

சூர வீர தீர சம்மாரா யூரா
ராரா வருக வருகவா ஒளிர் (மயி

(5.) சுந்தரமே மந்தரமே
அந்தரமே லென்குருவே
முருகா முருகா முருகா
சிறுமகன்பாடு நற்பதம் பிழையாகனு
சினேகா சினேகா சினேகா
சித்தம் சிவதவ குமரா
மித்தம் கருள்திரு முருகா (மயிலா

---

எண்சீரடி

## விருத்தம்

குருவணக்கம்.

(1.) குருகுமராசமரபுரி திருமுருகநாதனே.
ஹரிமுருக ஞானகுருவே
(2.) மருமகலியாணிசிவ சிவகாமி சண்முகா
மணிகமல நடனகுருவே [னே
(3.) கணகடலின் பவவினையிலே மென்னைவேலா
கடக்கவைத்தாயே குருவே
(4.) கடியனைக்காப்பாற்று கண்மணி விண்மணி
கமலசுக ஞானகுருவே
(5.) பரமகுருயுபதேசந்தளித்தாயே நீ
பாலனுக்கருளுங்குருவே
(6.) நரகசுர வேறறுத்திட்டவடிவேலோனே
நன்றனெக்கருளுங் குருவே

(7.) பகருமொழி மெய்ஞான ஷண்முகா என்முகம்
பார்த்தழைத்தருளுங்குருவே

(8.) பண்மொழி பதப்பொருளே பரஞான பண்டிதா
பயின்றெனக் கருளுங்குருவே.

(1.) சந்ததமுன்பதம் கெதிஎன்று நம்பினேன்
சாமிவநதருளு முருகா

(2.) சார்ந்தொழுந் துரும்பான சேயனைக் கண்பாரு
சாதுசுகஞான முருகா

(3.) சாமியே கரங்குவித்தாடினேன் பாடினேன்
தருணங்கண்பாரு முருகா

(4.) சிவகாமி சுந்திரா சோமகுரு மந்திரா
சிறுவனுக்கருளு முருகா [களின்

(5.) சிக்கல் நன்மதுரை புகழோங்கு சிவஸ்தலங்
சென்று நின்றாடு முருகா

(6.) சிவநாசி நடனசுழி கமலாசனத்திலே
தவம்புரியு ஞான முருகா

(7.) சிவஞானவழியரிய புரியுசிவகுருமணி
சிவராஜயோக முருகா

(8.) சரகணபவானந்த பிரணவப்பொருளான
தருணவந்தருளு முருகா.

(1.) அப்பனே ஒப்பிலாசுயஞ்சோதி வழகனே
அடியனுக்கருளு வழகா

(2.) மப்பனே மாணிக்கவேலனே லோலனே
மணியணியு மார்புவழகா

(3.) போதிக்க நன்னெறியை பூரணமயமான
போத்தி வைத்தருளுவழகா

(4.) சிற்சபை நடனமிடு தேவசன்னிதியோக.
சிங்காரமான வழகா

(5.) சித்தாந்தம் வேதாந்தம் சமரசசுகானந்த
சிஷ்டிக்க வந்தவழகா

(6.) வெற்றிமயிலேறி விளையாடுமுக ஷண்முகா
பற்றிவேல்கொண்டவழகா

(7.) பஞ்சமா பாதகந் தன்னிலே எந்தனை
சஞ்சலப் படுவதழகா

(8.) பண்ணிருகையனே பரமகுருநாதனே.
பாலனுக் கருளுவழகா.

(1.) மணிமகுடவாசகுகை மண்டபம்மீதிலே
தொனியான நாதகுமாரா

(2.) பணியன்சிறு பாலன்யான் தழுவினேன் நாதனே
பரமருளுஞான குமரா [வழி

(3.) தொனியோசையுடன்சென்ற தவயோகி ஞான
தந்தருளுஞான குமரா [மொழி

(4.) சுழியான திறவுகோலுண்டென்று சுருதி
சூட்டிவைத்தாயே குமரா

(5.) சுகஞான வழியறிய பேரின்பவீட்டிலே
சூட்டிவைத்தருளுங்குமரா

(6.) அகமோகலோகும காமவெற்றிநீக்கி நீ
அடியனுக்கருளுங்குமரா

(7.) பரலோககையலாய புரவுதந்தாள நீ
பண்ணிவைத்தருளுங்குமரா [வேலனே

(8.) சிரங்கு வித்தொழும் பணியன்கதறினேன்
சிங்காரமான குமரா

12132

(1.) தரும நெறிஞானவழிபோதமயமானந்த
கருணையவதார வடிவே

(2.) குருமணியேசிறுவனுனை வேண்டினேன் நாதனே
தருணம்வந்தாளு வடிவே

(3.) சுருதிதவ மருவுமதி சந்திரா மந்திரா
சூட்டிவைத்தருளு வடிவே

(4.) புஜரகித வள்ளிதெய்வானை மணவாளனே
பூரணானந்த வடிவே

(5.) கஜமுகனுக்கிளைய சாமிசிவசங்கரா
ஜெகநாதமான வடிவே

(6.) கெங்கை முச்சுடரான மங்கை மணவாளனே
துங்கமணிஞான வடிவே

(7.) சங்கநிதிகைலாய பெரியசுகமானந்த
சங்குமணிஞான வடிவே

(8.) தங்குருஞானகிளி ஓங்காரதேவரொளி
தந்தனக்கருளு வடிவே

(1.) வேருருயுனையன்று இவ்வுலகுமீதிலே
வென்றனுக்கருளு மருவே

(2.) சிறுமனவன்படிதுயர பார்த்து தந்தாளுகுரு
சிருவனுக்கருளு மருவே,

(3.) குருவழகாவடிவழகா மணிவழகமார்பனே
வந்தருளுஞான மருவே

(4.) சித்தாந்த வேதாந்த சுயஞ்சோதிமயமான
சித்தர்குருஞான மருவே

(5.) வித்தைக்கு முத்தாநத்து மணிமார்பனே
முத்திதந்தருளுமருவே

(6.) சிவராசயோகனே சிவலோகநாதனே
சிறுவனுக்கருளு மருவே

(7.) சுயஞ்சோதிவடிவான சுழிமுனைசுடரான
சோமசுகஞான மருவே

(8.) மருமணியே நவமணியே குருமணியே தந்தருளு
தருகுமரஞான மருவே,

1. தாயுநீ தந்தைநீ தந்தருளுமுருகா நீ
தெய்வானை ஞானபொருளே

2. காணவேவள்ளியை கானகந்தன்னிலே
கனவேட பூண்டபொருளே

3. தாவடந்தான்பூண்டுதள்ளுடுங்கிழவர்போல்
மாவேங்கை நின்ற பொருளே

4. பழனிமலை வெள்ளிமலை குணவாசமேருமலை
பறந்து விளையாடும்பொருளே

5. குருநமசிவாய திருஞான உபதேச மொழி
கடியனுக்கருளும் பொருளே

6. காருகங்காதரா காவடியரோகரா
கார்த்தருளு ஞானபொருளே

7. பவமான பிணிகடலைவிட்டு நீ என்னையே
பாவித்து வந்தாட்பொருளே

8. பழனிமலைவேலனே திருவடிபிடித்தேனே
பார்த்தருளும் ஞானபொருளே.

1. கந்தகோட்டந்தனில் வந்து விளையாடிடு
கருணாகரக் கடவுளே

2. வந்திடும் பாலனுக்கருளுகுரு ஷண்முகா
தந்தருளுஞான அருளே

3. சண்முகா துய்யமணி சுப்பிரமணிவேலனே
சருணம் வந்தருளுபொருளே

4. சாலோக சாமீப சாரூப சாயுஜ்யவேலனே
சார்ந்துதந்தருளுபொருளே

5. சரகணபவானந்த சண்முகானந்தகுரு
தமையனுக்கருளு பொருளே

6. கந்தகமழ் வுந்தியின் மணமாலை யோகனே
வந்தவினை நீக்கும் பொருளே

7. சந்ததம்போற்றினேன் சாமிகுருநாதனே
சண்முகானந்த பொருளே

8. செந்தமிழ்மதுரை யுதிர்கருணைபதி சுந்தரா
தந்தருளுஞான பொருளே.

சிதசுதா சிதமணிமண்டவா வெண்டினேன்
சிதவைதளும் மணியே
சிதாந்த வேதந்த சிகாரம்ப சுயஞ்சோதி
சிருவனுக்கருளு மணியே
பக்திமொதி யுத்திபுரி நந்தினேன் வேலனே
சிதிதந்தராளு மணியே
பித்தன்யான் வேண்டினேன் அய்யனே மெய்யனே
வெதிதந்தாளு மணியே
தித்திக்கதினைமாவை யுண்டுபசியாறிடு
தெய்வாளமா மணியே
நித்திக்கருணை மொருதந்திர நி யெனக்கிடருளு
நிர்தஞான மணியே
புதியுசிதியும் உன்னடமிருக்கதே
பதிபதிஞான மணியே
வெற்றி மயிலேறி விளையாடுமுகவ ஷண்முகா
நதினேன் ஞானமணியே

இராகம்—சாவேரி] [தாளம்—ஏகம்

பல்லவி

(1.) ஆலாலமுண்டவர்க்கும்
அம்பிகைக்கும் மங்களம்

அனுபல்லவி

(2.) ஆண்டாள் திருவடிக்கும்
ஆனந்தகிருஷ்ணனுக்கும்
நித்திய சுபமங்களம்

சரணம்

(3.) கருணை மெய்ஞானிகட்கும்
வர்ணமயில் வேலவர்க்கும்
குருமந்திர நாதருக்கும்
கோரிடும் பன்னவர்க்கும்
நித்திய சுபமங்களம்.

---

21323

சண்முகப் பாமாலை
பக்தரஸக் கீர்த்தனை
முதல் பாகம்

முற்றிற்று.

இதனுடைய இரண்டாம் பாகம் உடனே வெளிவரும்!

PRINTED AT THE UMAPATHI PRESS, G. T., MADRAS